2nd March 1968]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : (அ) இல்லை.

(இ) தீவைப்புப்பற்றி எவ்வித புகாரும் போலீசில் பெறப்படவில்லை.

(உ) and (எ) கேள்விக்கு இடமில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note*—An asterisk * at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTION *re* DISTURBANCES OUTSIDE THE ARUVANKADU CORDITE FACTORY AND SHOOTING NEAR THE POLICE STATION.

MR. CHAIRMAN : I have received notice of a motion under rule 43 of the Madras Legislative Council Rules given by Thiru R. Raman Nair for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the disturbances outside the Aruvankadu Cordite Factory on 1st March 1968 and the shooting near the Police Station. 4-00 p.m.

திரு. ஆர். ராமன் நாயர் : இது அவசரமான காரியம். அருவங்காடு பாக்டரிக்கு பக்கத்தில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் ஏற்பட்டிருக்கிறது. போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இருந்த மக்களிடையே ஏற்பட்டு இருந்தாலும் கூட துப்பாக்கிப் பிரயோகம் விரிவு அடைந்திருந்தால் பல ஆயிரக்கணக்கான மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு இருக்கும். அதனால்தான் இது அவசரம் என்று சொல்லுகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : அருவங்காட்டில் நடந்ததால் இது அவசரமா ?

திரு. ஆர். ராமன் நாயர் : பாக்டரிக்குப் பக்கத்தில் நடந்திருப்பதால் இது அவசரம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அருவங்காடு வெடி மருந்துத் தொழிற்சாலையில் வேலை பார்க்கிற தொழிலாளர்கள் இருவர் முதல் தேதி காலையில் அங்கிருக்கின்ற போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரில் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேறு எந்த விதமான பிரச்னையும் அங்கு கிடையாது. கூலி உயர்வு பிரச்னை, வேறு கோரிக்கைகள் எதுவும் கிடையாது. அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை மத்திய சர்க்காருக்கு உட்பட்டது. போலீஸ் ஸ்டேஷன் கட்டிடமும் அந்தத் தொழிற்சாலைக்கு உட்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காருக்கு உட்பட்டிருக்கிறது. அங்கே இரண்டு தொழிலாளர்கள் சண்டை போட்டுக்கொண்ட நேரத்தில் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து சப் இன்ஸ்பெக்டர் அவர்களை வருமாறு அழைக்க அவர்கள் மறுத்து இருக்கிறார்கள். மறுத்தவுடன் போலீசாரை விட்டு அவர்களை அழைத்து வரச் செய்திருக்கிறார். அவர்கள் உள்ளே வந்ததும் அவர்களைக் கண்டித்து இருக்கிறார். நமக்கு வந்திருக்கிற தகவல்படி அந்தத் தொழிலாளர்களைப் போலீசார் அடித்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு ஒரு 200 தொழிலாளர்கள் போலீஸ் ஸ்டேஷனைச் சூழ்ந்துகொண்டு அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். அவர்களை ஜாமீனில் உடனடியாக விடுதலை செய்திருக்கிறார்கள். ஜாமீனில் வெளியேறிய பிறகு மறுபடியும் ஒரு மணி நேரத்திற்குப் பின்னால் ஒரு 500, 600 தொழிலாளர்கள் கூடிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனைச் சுற்றி வளைத்து சப் இன்ஸ்பெக்டரை சஸ்பெண்டு செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பெரிய அளவிற்கு ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். அந்த நேரத்தில் இன்ஸ்பெக்டரும் அங்கு வந்து 'நான் சஸ்பெண்டு செய்கிற கோரிக்கையை ஒத்துக்கொள்ளு

கிறேன், விரைவில் சஸ்பெண்டு செய்வார்கள், அமைதியாகக் கலைந்து செல்லுங்கள்' என்று சொல்ல, அதற்கிடையே அங்கே எஸ். பி. வந்து விட்டார்கள். அதற்கிடையே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், 1,500 தொழிலாளர்கள் போலீஸ் ஸ்டேஷனைச் சூழ்ந்துகொண்டு உடனடியாக சஸ்பெண்டு செய்யவேண்டும், அந்த சப் இன்ஸ்பெக்டரையும் போலீஸ் காரர்களையும், என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அவர்களிடத்தில் சமாதானம் செய்த நேரத்திலே அங்கு வாசலில் நிறுத்தப்பட்டிருந்த ஜீப் காருக்கு தீ இடப்பட்டு எரிந்து போய் இருக்கிறது. ஒரு ஜீப் கார் எரிந்து போனதும், அடுத்த ஜீப் காரை எரிக்க முயற்சித்து இருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் தடியடிப் பிரயோகம் நடத்தி இருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்குப் பெரும் சேதம் விளைவிக்கிற அளவிற்கு போலீஸ் ஸ்டேஷன் மீது படையெடுத்து கற்களை வீச ஆரம்பித்து எஸ். பி. உள்பட பல போலீஸ் அதிகாரிகளும் காயம் அடைந்திருக்கிறார்கள். உடனடியாக துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று, துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 பேர் உயிர் இழந்து, 5 பேர் படுகாயம் உற்றிருக்கிறார்கள். பெரிய போலீஸ் அதிகாரிக்கும் மற்ற போலீஸ்காரர்களுக்கும் அங்கு பலத்த காயங்கள் ஏற்பட்டு இருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது. அது பற்றி விசாரிப்பதற்கு ஐ. ஜி. அவர்கள் இன்று பிற்பகல் விரைந்து சென்றிருக்கிறார். அதற்கிடையே அந்த சப் இன்ஸ்பெக்டரும் அடுத்த இரண்டு போலீஸ் காரர்களும் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களை சஸ்பெண்டு செய்து விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இந்த விளக்கத்தோடு இது அன்றாட நடை முறைக்கு உட்பட்ட பிரச்னை என்ற அளவில், வேறு அதற்கான நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன என்ற அளவில் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அவரும் வற்புறுத்தமாட்டார், தாங்களும் தேவையில்லை என்று தீர்ப் பளிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

MR. CHAIRMAN : Is the hon. Member pressing his notice ?

THIRU R. RAMAN NAIR : I am not pressing it, Sir.

III GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1968-69—(cont.)

MR. CHAIRMAN : Now we shall continue the discussion on the Budget. The hon. Member Thiru P. Ethiraj will wind up his unfinished speech soon.

* **திரு. பி. எதிராஜ் :** தலைவர் அவர்களே, நேற்று நான் பேசியதற்கு தொடர்பாக இன்று சில விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். முக்கியமாக நமது அரசாங்கமானது இனாம் விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டும். 1948-ம் வருடத்தில் ஒரு சட்டமும் 1963-ம் வருஷத்தில் ஒரு சட்டமும், இனாம் ஒழிப்புச் சட்டம் என்றும் இயற்றப்பட்டன. 1948-ம் வருடத்திய 26-வது சட்டத்தில், நெல் சாகுபடி பாத்தியதையை நிர்ணயிக்கிற உரிமை அதிகாரம் செட்டில்மெண்டு ஆபீசர்களுக்கு மட்டுமே உண்டு என்றும், சிவில் கோர்ட்டுகளுக்கு அந்த அதிகாரம் இல்லை என்றும் வரையறுத்துக் கூறப்பட்டிருந்தது. ஆனால் 1963-ம் வருடத்திய 26-வது சட்டத்தில் 12-வது பிரிவில், செட்டில்மெண்டு ஆபீசர்களுக்கு மாத்திரம் அதிகாரம் உண்டு என்று மட்டும் இருக்கிறதே தவிர, சிவில் கோர்ட்டுகளுக்கு அந்த அதிகாரம் இல்லை என்று சொல்லப்படாததன் காரணமாக, இப்போது கும்பகோணம் கோர்ட்டில் இனாம் தாரர் திருப்பணந்தாள் மடத்தாரால் 300-க்கு மேற்பட்டவர்களின் வழக்குகள் நடைபெற்றுவருகின்றன. ஆகவே 1948-ம் வருடத்திய சட்டத்தில் இருக்கிறதே அதே போல சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் இல்லை என்ற ஷரத்தை 1963-ம் வருடத்திய 26-வது சட்டத்தில் அதை சேர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவ்வாறு சேர்க்கப்படாததன் காரணமாக இப்போது புதுக்கோட்டைப் பகுதியில், இனாம் விவசாயிகள் என்று பலாத்காரசக்திகள் புகுந்து, விவசாயிகளுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறது